[2009 ஜூலை 9

புதிய கட்டடம் கட்ட வழிவகை இல்லை என மாவட்ட ஆட்சியரிடமிருந்து தகவல் பெறப்பட்டுள்ளது. எனவே, குளச்சல் மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின் தற்போதைய கட்டடத்தினை முறைப்படி பழுதுபார்க்கவும், அது இயலாத நிலையில் வாடகைக் கட்டடத்தில் சங்கம் இயங்கவும், மீன் துறை உதவி இயக்குநர் ஆவன செய்ய அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜாண் ஜேக்கப்.*

திரு. எஸ். ஜாண் ஜேக்கப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல குளச்சலை அடுத்துள்ள தேங்காப்பட்டணத்திலும், குளச்சலிலும் மீன்பிடி துறைமுகம் வர இருப்பதால், அந்த மக்களின் நிதி ஆதாரத்தைப் பெருக்கும் விதத்திலே தேங்காப்பட்டணத்திலும் ஒரு கட்டடம் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் வாயிலாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு :** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

முற்பகல் 10-30

2. தகவல் கோரல்

(அ) வேலூர் மாவட்டத்தில் நிலவும் குடிநீர்ப் பிரச்சினை

திரு. சி. ஞானசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .*

2009 ஜூலை 9]

திரு. கு. பாண்டுரங்கன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன், ஒரு நிமிடம் இருங்கள். திரு. கு. பாண்டுரங்கன் ஏதோ mention பண்ணவேண்டுமென்று சொல்கிறார். திரு. கு. பாண்டுரங்கன், சொல்லுங்கள்.

திரு. கு. பாண்டுரங்கன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம், பாலாற்றுப் படுகையில் இருந்தாலும், அது வெயில் மாவட்டம் என்றும், வறட்சி மாவட்டம் என்றும் பட்டம் பெற்றுள்ளது. அங்கே பருவ மழை பொய்த்துவிட்டது மட்டுமல்ல, பாலாறு வறண்டு, மணல் வியாபாரத்தாலும், நிலத்தடி நீராதாரம் வெகுவாக வற்றி, குறைந்து போய், குடிதண்ணீருக்கே கடும் பஞ்சம் நிலவுகிறது. பெரும்பாலான பகுதிகளில் தாய்மார்கள் காலிக் குடங்களைக் கையில் ஏந்தி, சாலை மறியலில் ஈடுபடுவதும், ஆர்ப்பாட்டம் செய்வதும், உண்ணாவிரதம் இருப்பதும், மக்கள் பிரதிநிதிகளைச் சூழ்ந்துகொண்டு எதிர்ப்பினைத் தெரிவிப்பதும் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கு. பாண்டுரங்கன், கேள்வியை மாத்திரம் கேளுங்கள். உங்கள் demand என்னவென்று சொல்லுங்கள். எந்த ஊர் என்று specific-க்காக சொல்வதாக இருந்தால் சொல்லுங்கள்.

திரு. கு. பாண்டுரங்கன்: இரண்டு நிமிடங்களில் சொல்லி விடுகின்றேன். வேலூர் மாவட்டத்தில் நிலவுகின்ற கடுமையான குடிதண்ணீர் தட்டுப்பாட்டைப் போக்குவதற்காக, தமிழக அரசின் சார்பாக போர்க்கால அடிப்படையில் 25 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கீடு செய்து, மாவட்ட அளவில் மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் தலைமையிலோ அல்லது அந்த மாவட்ட அமைச்சர் தலைமையிலோ ஓர் ஆய்வுக் கூட்டத்தை உடனடியாக நடத்தி, அதன்மூலமாக அங்கே நிலவி வருகின்ற குடிதண்ணீர் தட்டுப்பாட்டைப் போக்குவதற்கு ஏதுவாக, நான் பேசுவதற்கு தாங்கள் அனுமதி வழங்கவேண்டுமென்று கனிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். நீங்கள் சொல்லியாயிற்று, போதும். மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டத்தில் கடுமையான குடிதண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டு, வேலூர் தொகுதிக்குட்பட்ட அல்லாபுரம் மற்றும் தொரப்பாடி

பேரூராட்சிகளில் 30 நாட்களுக்கு ஒருமுறைதான் குடிதண்ணீர் வழங்க முடிகிறது. அதேபோல வேலூர் மாநகராட்சியிலும் 10 நாட்களுக்கு ஒருமுறைதான் குடிதண்ணீர் வழங்கக்கூடிய நிலை இருக்கிறது. வேலூர் தொகுதி மட்டுமல்ல, பக்கத்திலே இருக்கக்கூடிய தொகுதிகளிலேகூட இந்த நிலைமை இருக்கிறது. நேற்றைய சம்பவத்தைப் பார்த்தோமானால், லத்தேரி என்ற பகுதியில் தாய்மார்கள் காலிக் குடங்களை வைத்துக்கொண்டு, சாலை மறியலில் ஈடுபட்டு, அங்கே தண்ணீர் வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இதுபோன்ற நிகழ்வுகள் பல இடங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

ஏற்கெனவே வறட்சியைப் போக்குவதற்காக 5 கோடி ரூபாயை மட்டுமே நம்முடைய தமிழக அரசு வழங்கியிருக்கிறது. இது “யானைப் பசிக்கு சோளப் பொறி” போன்ற கதைதான். ஆகவே அதிகமாக நிதியை ஒதுக்கீடு செய்து, ஆங்காங்கே ஆழ்துளைக் கிணறுகளை வெட்டியாவது அல்லது லாரிகளில் குடிதண்ணீரை ஒவ்வொரு கிராமத்திற்கும், நகரத்திற்கும் கொண்டு போய் சப்ளை செய்தாவது குடிதண்ணீர்ப் பிரச்சினையை இப்போதைக்குத் தீர்த்து வைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று கேட்க விரும்புகிறேன்.

நம்முடைய மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள், 1,400 கோடி ரூபாய்க்கான திட்டத்தை, ஒகேனக்கல் குடிநீர்த் திட்டம் என்று சொல்லாமல், அதை செக்கனூர் குடிநீர்த் திட்டம் என்று சொல்லி நல்ல அறிவிப்பைச் செய்திருக்கிறார்கள். அதற்காக எங்களுடைய மாவட்ட மக்கள் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள். இதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் எங்களுடைய நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகிறோம். அதேநேரத்தில் தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி பகுதிகளை இப்போதே எப்படி எடுத்துக்கொள்கிறீர்களோ, அந்தத் திட்டத்தோடு வேலூர் மாவட்டத்திற்கான திட்டத்தையும் இணைத்து எடுத்தால், உங்களுக்கு செலவும் குறையும். கிட்டத்தட்ட 100 கோடி ரூபாய் முதல் 200 கோடி ரூபாய் வரை மீதப்படுத்தலாம். ஆகவே மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்து, செக்கனூர் குடிநீர்த் திட்டத்தின்மூலம் காவிரி ஆற்று நீரை எங்கள் மாவட்டம் முழுவதற்கும் கொண்டு வந்து சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா? அதுவரை இப்போதைக்கு லாரிகள் மூலம் குடிநீரை சப்ளை செய்வதற்கு நடவடிக்கை எடுத்து, 25 கோடி ரூபாயை வறட்சியைப் போக்க அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

2009 ஜூலை 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டத்திலே குடிநீர்த் தட்டுப்பாடு வந்திருக்கக்கூடிய சூழ்நிலையைச் சுட்டிக்காட்டி, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. பாண்டுரங்கன் அவர்களும் திரு. ஞானசேகரன் அவர்களும் இங்கே ஒரு பிரச்சினையைக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். வேலூர் மாவட்டத்தைப் பொறுத்தவரை, கடுமையான குடிநீர்த் தட்டுப்பாடு வரக்கூடிய சூழ்நிலையை அறிந்து, நமது தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் உடனடியாக போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்து குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கவேண்டுமென்று இந்தத் துறைக்கு ஆணையிட்டு, அந்த வகையில் மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் அந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, உடனடியாக 5 கோடி ரூபாய் நிதியை அவர்களுக்கு வழங்கி நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்ற செய்தியை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* மேலும் அதிக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை நம்முடைய உறுப்பினர்கள் எடுத்து வைத்திருக்கிறார்கள். தேவைப்படின், நிச்சயமாக தேவையான அளவுக்கு நிதி ஒதுக்கப்படும் என்ற உறுதியையும் நான் துறையின் மூலமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

(ஆ) மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மானியக் கோரிக்கையின்போது இடஒதுக்கீடு குறித்து குறுக்கிட்ட சில உறுப்பினர்களின் உரைகளை நீக்கக் கோருதல்

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மானியக் கோரிக்கையின்மீது, நான் சில கோரிக்கைகளை, இருக்கின்ற சில நிலவரங்களை எடுத்துச் சொன்னேன். அதற்கு ஒரு நல்ல ஆரோக்கியமான விவாதமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பதில் எங்களுக்குக் கிடைத்துக்கொண்டிருந்தது. என்னிடம் உள்ள புள்ளிவிவரங்களை, இருக்கின்ற நிலைமைகளை முழுமையாக எடுத்துச் சொல்ல, வாய்ப்பு இருந்திருக்கும் என்று சொன்னால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமிருந்து எங்களுக்கு நல்ல பதில் கிடைத்திருக்கும். நல்ல தீர்வு ஏற்பட்டிருக்கும்.